**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 06.04.2026</u>**

**OS.97/2018**

**பி.வா.சா.1 திரு.சரவணன்**

**பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் பில்டிங் காண்ட்ராக்டர். எத்தனை வருடமாக நான் பில்டிங் காண்ட்ராக்டராக வேலை செய்து வருகிறேன் என்றால் 15 வருடமாக. 22.08.2016ம் தேதி ஒரு விக்கிரைய உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது அது யார் யாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் நான், எனது அப்பா சின்னகண்ணு, அம்மா வஜ்ஜிரம்மாள் ஆகியோர் சித்ரா என்பவருக்கு கடனுக்காக எழுதிக்கொடுத்தோம். விக்கிரைய உடன்படிக்கை பத்திரத்தில் உள்ள சொத்து விவரம் தெரியுமா என்றால் 3 ஏக்கர் 60 சென்ட். அது எங்கு உள்ளது என்றால் கெட்டுப்பட்டியில் உள்ளது, அது எங்களுடைய பூர்வீக சொத்து.

2. விக்கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக்கொடுத்த சித்ரா எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் அவர் அண்ணாமலைப்பட்டியை சேர்ந்தவர். அண்ணாமலைப்பட்டிக்கும் தாவாசொத்து உள்ள கெட்டுப்பட்டிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 Km. வழக்கு சொத்திற்கு சென்று வர வழிப்பாதை எல்லாம் நன்றாக உள்ளதா என்றால் உள்ளது. எவ்வளவு

தொகைக்காக அக்ரிமெண்ட் போடப்பட்டது என்றால் ரூபாய் 4 இலட்சத்திற்காக போடப்பட்டது. அந்த அக்ரிமெண்ட்டில் உள்வாய்தா எவ்வளவு கொடுக்கப்பட்டது என்றால் 2 வருடம். அந்த அக்ரிமெண்ட்டில் யாரெல்லாம் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் பரிமளா, இலட்சுமி ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் சாட்சிகள் என்ற இடத்தில் முதல் சாட்சி கையெழுத்து யார் செய்தது என்றால் எனது சித்தி எல்லம்மாள். அவர் எனது அப்பாவின் 2ஆவது மனைவி என்றால் சரிதான். அந்த எல்லம்மாள் எங்கு உள்ளார் என்றால் அவர் எனது அம்மாவுடன் தான் வசித்து வருகிறார். மேற்படி சாட்சி பரிமளா, இலட்சுமி ஆகியோர் எங்கு உள்ளார்கள் என்றால் பரிமளா பெங்களுரில் உள்ளார். இலட்சுமி கோயமுத்தூரில் வசித்து வருகிறார். மேற்படி 3 பேருமான எல்லம்மாள், இலட்சுமி, பரிமளா ஆகியோர் அந்த சாட்சி கையெழுத்து போடும்போது எங்கு வசித்தார்கள் என்றால் எல்லம்மாள் அம்மாபேட்டையில் இருந்தார், இலட்சுமி பென்னாகரத்தில் வசித்தார், பரிமளா பெங்களுரில் வசித்தார்.

3. இன்றுவரை எனது அப்பா, அம்மா மற்றும் சாட்சிகளான எல்லம்மாள், இலட்சுமி, பரிமளா ஆகியோருடன் நான் இன்றுவரை நல்ல பேச்சுவார்த்தையில்தான் உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்த பத்திரத்தில் நான், எனது அப்பா, அம்மா சொல்லிதான் எல்லம்மாள், இலட்சுமி, பரிமளா ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். விக்கிரய உடன்படிக்கை பத்திரம் எனது குடும்பத்தார் அனைவரும்

சேர்ந்துதான் சித்ராவிற்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம் என்றால் அவ்வாறு ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்தால்தான் கடன் தருவதாக சொன்னார், அதற்காக ஏற்படுத்திக்கொடுத்தோம். அந்த பத்திரம் எந்த பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் பெயர் தெரியவில்லை. பத்திரம் பதிவு செய்யும்போது நாங்கள் மட்டும்தான் இருந்தோமோ வேறு யாரவது 3ம் தரப்பினர்அங்கு இருந்தார்களா என்றால் 3ம் தரப்பினர்கள் யாரும் அங்கு இல்லை.

4. தாவா விக்கிரய உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்து அந்த ஒப்பந்தத்தில் கண்டுள்ளபடி 2 வருட காலத்திற்குள் நாங்கள் கிரையம் செய்து கொடுக்காததால்தான் வாதி சித்ரா எங்களுக்கு 06.03.2018–ம் தேதி வழக்கறிஞர் மூலம் சொத்தை கிரையம் செய்து கொடுக்கசொல்லி அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல, நான் 2 இலட்சம் பணம் கொடுப்பதாக சொன்னேன் அதை பெற்றுக்கொள்ளாமல் ஊரில் சண்டை ஆகிவிட்டது அதன்பிறகுதான் நேட்டிஸ் கொடுத்தார்கள். அதன்பின் நாங்கள் 17.03.2018–ல் வழக்கறிஞரை வைத்து பதில் அறிவிப்பு கொடுத்துள்ளோம் அதில் 2 இலட்சம் பணம் கொடுத்தோம், வாதி வாங்கிக்கொள்ளவில்லை என்ற சங்கதியை குறிப்பிட்டு சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம்.

5. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 நாங்கள் கொடுத்த பதில் அறிவிப்பு அதில் நான் சொன்னதுபோல 2 இலட்சம் பணம் கொடுத்து அதை வாதி பெற்றுக்கொள்ளவில்லை என்பதை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். விக்கிரய உடன்படிக்கை பத்திரம் எங்கு வரைவு தயார்

செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரம் சார்பதிவாளர் முன்னிலையில்தான் நாங்கள் கையொப்பம் செய்தோம் என்றால் அந்த பத்திரத்தில் நாங்கள் வெளியே அந்த பத்திரத்தில் கையொப்பம் செய்துவிட்டு பின்னிட்டு சார்பதிவாளர் அலுவலகத்திலும் நாங்கள் கையொப்பம் செய்தோம். அந்த பத்திரத்தில் நாங்கள் கையொப்பம் செய்யும்போது நான், எனது தந்தை, தாயார் ஆகியோர் படித்துபார்த்துதான் கையொப்பம் செய்தோம் என்றால் இல்லை, படித்துப்பார்க்கவில்லை. அந்த பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்த எனது சித்தி, மற்றும் எனது தங்கைகள் எதற்காக சாட்சி கையெழுத்து போடுகிறோம் என்று என்னிடம் அவர்கள் கேட்கவில்லையா என்றால் கேட்டார்கள், கடன் ரூபாய் 4 இலட்சம் கேட்டுள்ளேன் அதற்காகத்தான் கையெழுத்து போடுகிறோம் என்று சொன்னேன்.

6. பொதுவாக சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்கள் பதிவு செய்யும்போது அந்த பத்திரத்தில் உள்ள விவரங்களை சார்பதிவாளர் அலுவலகத்தில் படித்து காண்பிப்பார்கள் அந்தவகையில் வா.சா.ஆ.1 பத்திரத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் எங்களிடம் அந்த சொத்து விற்பனை செய்வதற்காகத்தான் ஒப்பந்தம் போடப்பட்டது என்ற படித்துக்காண்பித்தார்களா என்றால் படித்துக்காண்பித்தார்கள், ஆனால் நாங்கள் கடன் வாங்குவதற்கு அவ்வாறு பத்திரத்தை எழுதிக்கொடுத்தால்தான் கடன் கொடுப்பதாக சொன்னதால் எழுதிக்கொடுத்தோம். நான் ரூபாய் 4 இலட்சம் கடன் வாங்கியதாக

சொல்லும்போது நான் ரூபாய் 4 இலட்சத்தையும் வட்டியையும் நீதிமன்றத்தில் செலுத்தி அந்த பத்திரத்தை ரத்து செய்ய ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.தாவா சொத்தை நாங்கள் விற்பனை செய்வதற்காக ஒப்பந்தம் போட்டதால்தான் எந்த நடவடிக்கையும் நாங்கள் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. வாதி அனுப்பிய சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டு அதன்பின் அனுப்பிய பதில் அறிவிப்பில் வாதி மோசடியாக கடனுக்காக தான் ஒப்பந்தம் எழுதிக்கொண்டார் அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுப்பதாக எதுவும் சொல்லவில்லை, அதேபோல நாங்கள் தாக்கல் செய்துள்ள பதில் வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதி 06.03.2018–ம் தேதியில் அனுப்பிய சட்ட அறிவிப்பில் 21.03.2018–ம் தேதியில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை மொரப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் காத்திருப்பதாகவும், அங்கு நாங்கள் வந்து கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருந்தார் அதன்படி நாங்கள் மேற்படி தேதியில் மொரப்பூர் சார்பதிவாளர் அலவலகத்திற்கு சென்றோமா என்றால் இல்லை.

8. நான் சொல்வதுபோல கடன் ரூபாய் 4 இலட்சம் பெற்றுக்கொண்டு ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தால் 21.03.2018ம் தேதியில் மொரப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பொதுவர்களுடன் சென்று 4 இலட்ச ரூபாய் வாதிக்கு கொடுப்பதாக சொல்லிபேசி ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்திருப்போம் நான் சொல்வது பொய் என்பதால்தான்

அவ்வாறு செய்யவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் நாங்கள் ரூபாய் 4 இலட்சம் கடனுக்காகத்தான் வாதியுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தி இருந்தால் பதில் சட்ட அறிவிப்பு அனுப்பிய உடன் ரூபாய் 4 இலட்சத்தை திருப்பி கொடுத்து ஒப்பந்தத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்திருப்போம் இன்றுவரை அவ்வாறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதற்கு காரணமே தாவா சொத்தை கிரையம் செய்வதற்காகதான் ஒப்பந்தம் போடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

9. வாதி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த பிறகு பொய்யான சாங்கதிகளை சொல்லி பதில் சட்டஅறிவிப்பு அனுப்பிவிட்டு, பொய் சங்கதிகளை சொல்லி பதிலுரை தாக்கல் செய்து பொய்யாக இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பொய்யானது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சித்ரா வழக்கு தாக்கல் செய்துள்ளபடி நாங்கள் கிரையம் செய்து கொடுக்க கடமைப்பட்டவர்கள் அதனால் வாதிகோரியுள்ளபடி இந்த வழக்கு தீர்ப்பாக வேண்டியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.04.06 15:35:03 +0530